செய்தி மற்றும் விளம்பரத் துறை

மானியக் கோரிக்கை எண் – 28

புதிய அறிவிப்புகள்
2011 - 2012

அறிவிப்பு 1

விழா நிகழ்வுகளைத் தொலைக்காட்சிகளுக்கு
நேரடியாக அனுப்ப மென்பொருள் இணைய வசதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசு விழாக்களின் நிகழ்வுகளைத் தலைமைச் செயலகச் செய்தி வெளியீட்டுப் பிரிவிலிருந்து இணைய வசதியில் அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்க ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மென்பொருள் வசதி (Online Media Exchange and Supply Chain Management Solution) ஏற்படுத்தப்படும்.

அறிவிப்பு 2

அனைத்து மாவட்டங்களுக்கும்
நவீன தொழில் நுட்ப ஒளிப்படக்கருவிகள்

வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தோடு இணைந்து ஊடகங்களுக்கு ஒளிப்படங்களை வழங்கிட அனைத்து மாவட்டங்களில் உள்ள செய்திமக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 30 நவீன தொழில் நுட்ப ஒளிப்படக் கருவிகள் (High End Digital Cameras) ரூ.1 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும் .

அறிவிப்பு 3

அரசு சார்பில் அன்னை தெரசா நூற்றாண்டு நிறைவு விழா

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

ஆணையிட்டவாறு அன்னை தெரசா நூற்றாண்டு நிறைவு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

## அறிவிப்பு 4

மேற்கோள் செய்திகள் மின்னணு முறை பாதுகாப்பு

அரசின் முக்கிய செய்தி வெளியீடுகள், நிகழ்வுகள் பற்றிய செய்தி நறுக்குகள் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு முறையில் (Digitalization of Reference Materials) பாதுகாக்கப்படும்.

## அறிவிப்பு 5

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்ஜிஆர் நினைவிடம்,
காந்தி மண்டபம் புதுப் பொலிவுடன் புனரமைப்பு
பூங்காக்களுக்கு எழில் சேர்ப்பு

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜிஆர் நினைவிடங்கள் மற்றும் காந்தி மண்டபம் புதுப் பொலிவுடன் புனரமைக்கப்பட்டு எழிலூட்டப்படும். மேலும் மாற்றுத் திறனாளிகள் வசதிக்காக அனைத்து நினைவிடங்களிலும் சாய்வு நடைபாதைகள் அமைக்கப்படும்.

மறைந்த தலைவர்கள் மற்றும் தியாகச் செம்மல்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவகங்களில் உள்ள பூங்காக்களை எழிலூட்ட தனியார் நிறுவனங்களின் குழும சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility) அடிப்படையிலான சேவைகளும் பயன்படுத்தப்படும்.

## அறிவிப்பு 6

புதிய மணிமண்டபங்களுக்குப் பணியிடங்கள் உருவாக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 18.07.2011 அன்று திறந்து வைக்கப்பட்ட தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் மற்றும் தியாகி வாஞ்சிநாதன், விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர், முன்னாள் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார், தியாகி மார்ஷல் நேசமணி ஆகியோர் நினைவாக புதிதாகக்

கட்டப்பட்டு வரும் நினைவகங்கள் ஆக மொத்தம் 8 நினைவகங்களுக்கு பாதுகாப்புப் பணிக்கும், பராமரிப்புப் பணிக்கும் தேவையான காப்பாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் காவலர்கள் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும்.

அறிவிப்பு 7

பலநோக்குப் பயன்பாட்டுக்கு உகந்தவாறு
குடந்தை மகாமகம் கலையரங்கம் மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கும்பகோணத்தில் உருவாக்கப்பட்ட மகாமகம் கலையரங்கம் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்குப் பயன்பாட்டிற்காக மேம்படுத்தப்படும். இதன் நிருவாகப் பணிகளுக்காக ஒரு மேலாளர், காவலர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர் ஆகிய புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

அறிவிப்பு 8

மாணவர் குறும் படம் தயாரிக்க உதவித்தொகை உயர்வு

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மாணவர்கள் பயிற்சிக்காகக் குறும்படங்கள் தயாரிப்பதற்கான உதவித்தொகை ரூ.8,000 லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

அறிவிப்பு 9

நவீன தொழில்நுட்ப படக்கருவி –
சிறப்புப் பராமரிப்புப் பணிகள்

எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் திரையரங்கில் திரைப்படங்களைத் தெளிவாகவும் நவீன தொழில்நுட்பத்துடனும் திரையிட்டுக் காட்டும் வகையில் நவீன தொழில்நுட்ப படக்கருவி (High End Digital Projector) ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். மேலும் எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி

பயிற்சி நிறுவனத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்புப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## அறிவிப்பு 10

ஆறு மாவட்டங்களில் புதிதாக அரசுப் பொருட்காட்சி

அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கூடுதலாக வேலூர், தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் அரசு பொருட்காட்சி ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும்.

## அறிவிப்பு 11

புதுடெல்லி தமிழ்நாடு பொருட்காட்சி அரங்கம் புனரமைப்பு

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் பங்கேற்கும் வகையில் ஆண்டு தோறும் கண்காட்சி நடத்தப்படுகின்ற புதுடெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள தமிழ்நாடு பொருட்காட்சி அரங்கம் சர்வதேசத் தரத்தில் புனரமைக்கப்படும்.

## அறிவிப்பு 12

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும்
அரசு சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் விளக்கும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்படும்.

## அறிவிப்பு 13

மக்கள் தொடர்பு அலுவலகங்கள் சிறப்பு மேம்பாடு
புதிய கருவிகள் – விரைந்து செயலாற்ற வாகன வசதி

பெருகிவரும் செய்தியாளர் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு சென்னை, கடலூார், தஞ்சாவூர், தருமபுரி, காஞ்சிபுரம், திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, மற்றும் திருவள்ளூர் ஆகிய 10 மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் பணிகளை மேலும் விரைவு படுத்தி சிறப்புடன் செயலாற்ற 34 புதிய வாகனங்கள் ரூ.2,24,50,000/– மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தலைமையிடம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலகங்களுக்கு ரூ.59.87 இலட்சம் மதிப்பீட்டில் மடிக்கணினிகள், கெனான் டிஜிட்டல் ஒளிப்படக் கருவிகள் (Canon Digital Camera), வீடியோ புரஜக்டர்கள், நகல் எடுக்கும் கருவிகள், புகைப்படப் பிரிவிற்கு வண்ணப் புகைப்படப் பிரிண்டர், பலபயன் உள்ள வண்ண நகலெடுக்கும் கருவி, தலைமையிடம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆகியன வழங்கப்படும்.

<u>அறிவிப்பு 14</u>

எம் ஜி ஆர் அரசு திரைப்படம் – தொலைக்காட்சிப்
பயிற்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின்
விரைவான செயல்பாட்டுக்கு புதிய கருவிகள்

எம்ஜிஆர் அரசு திரைப்பட தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு, நான் லீனியர் படத்தொகுப்புக்கருவிகள், லைவ் சிங்க் ஒலிப்பதிவுக் கருவிகள், 42" எல்சிடி வண்ண தொலைக்காட்சி பெட்டிகள், இன்டெல் வகுப்பறைக் கருவிகள், 7 மடிக்கணினிகள் மற்றும் மாணவர் வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக புதிய வாகனம் ஆகியவை ரூ.46.55 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு, ரூ.30.25 லட்சம் மதிப்பீட்டில், ஒரு உயர்ரக வீடியோ காமிரா (High Definition Video Camera), ஒரு ஆப்பிள் மேக்புரோ நான் லீனியர் வீடியோ எடிட்டிங் சிஸ்டம் (Non-Linear Video Editing System), ஒரு நகலெடுக்கும் கருவி மற்றும் இரண்டு கணினி மற்றும் பிரிண்டர்கள் வழங்கப்படும்.